கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.92/2004** தேதி: **04.02.2026**

வாதி தரப்பு சாட்சி -1 (சுதாகர், த/பெ.சிவசங்கர்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**7** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

(1) தற்போது கிருஷ்ணசாமி முதலியார் டிரஸ்ட்ல் நிர்வாகி இல்லை என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி இறந்த காலத்தில் இருந்து இன்றளவும் நிர்வாகி இல்லை என்றால் சரிதான். நிர்வாகி இல்லாத காலத்தில் வாதிகளாகிய எங்களுக்கு இவ்வழக்கை நடத்த என்ன அதிகாரம் உள்ளது என்றால் நாங்கள் வழக்கு சொத்திற்கு பொருப்பாளர்கள் . ஆகவே இவ்வழக்கை நடத்த எங்களுக்கு அதிகாரம் உள்ளது.

(2) எனக்கு வழக்கு சொத்து குறித்து வழக்கு நடத்த அதிகாரம் உள்ளது என்பதை நிறுபிக்க ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வம்சாவழி பட்டியல் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா. 22 முதல் 46 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் நகல் என்றால் சரியல்ல.

(3) 7 ஆம் பிரதிவாதி செல்வம் 1 ஆம் பிரதிவாதியிடம் இருந்து வழக்கு சொத்தை சார்பு நீதிமனற்த்தின் உத்தரவின் அடிப்படையில் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அது ஒரு தலையான உத்தரவு ஆகும். அதேபோல் 7 ஆம் பிரதிவாதி வாங்கிய சொத்தினை 16 ஆம் பிரதிவாதிக்கு விற்பனைசெய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.04 17:04:28 +0530

போது விற்பனை செய்தார். அவ்வாறு விற்பனை செய்தது சரியானது தான் என்றால் சரியல்ல.

(4) அப்படி என்றால் நான் மேல் முறையீடு தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. அசல் வழக்கு எண் 225/2003 ன் படி 7 பிரதிவாதி கிரையம் பெற்றார் என்றாலும் அதன் படி அதை மறுவிற்பனை செய்ய அவருக்கு அதிகாரம் உண்டு என்றாலும் சரியல்ல.

(5) 7 ஆம் வாதி இறந்த பிறகு அவரது வாரிசுகளை முறையாக வாதிகளாக தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 7 ஆம் பிரதிவாதி வழக்கு சொத்தின் ஒரு பகுதியை வாங்கியதும் அதில் ஒரு பகுதியை விற்றதும் நீதிமனற்ம் விசாரிக்க அதிகார வரம்பு இல்லை என்றால் சரியல்ல.

(6) சார்பு நீதிமன்ற தீர்ப்பனையின் மீது மேல் முறையீடு செய்யாமல் இவ்வழக்கை நடத்துவது தவறு என்றால் சரியல்ல. இவ்வழக்கில் 7 ஆம் பிரதிவாதியை எந்த விதத்திலும் இந்நீதிமன்ற தீர்ப்பு கட்டுப்படுத்தாது என்றாலும் நான் சொத்து அபகரிக்க வேண்டும் என்ற நோக்கில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 7 மற்றும் 16 பிரதிவாதியை இந்நீதிமன்ற தீர்ப்பு கட்டுப்படுத்தும்.

(7) நான் பொய்யான வழக்கு தாக்கல் செய்து காலத்தை விரையம் செய்கிறேன் என்றால் சரியல்ல.

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.04 17:04:34 +0530

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை முற்றிற்று .

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.02.04 17:04:38 +0530

***Additional District Munsif , Cuddalore.***